ஆப்பிரிக்க நாடுகள் வரிசை 5

# கானா



'சோமலெ'

ஆப்பிரிக்க நாடுகள் வரிசை—5

# கானா

'சோமலெ'

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை 1.

முதற்பதிப்பு, அக்டோபர் : 1964

விலை 60 காசு

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.

# கானா

* குழந்தைகளை மகிழ்விப்பது சாக்லட்.
* அண்டை நாடுகளின் அரசியல் தலைவர்களை ஆட்டி வைக்க முயலுபவர் என்குருமா.
* சாக்லட்டும் என்குருமாவும் சேர்ந்தது கானா.

ஆசிய நாடுகளின் விடுதலைக்கும் எழுச்சிக்கும் ஜப்பானும் இந்தியாவும் வித்திட்டன. இவ்வாறே ஆப்பிரிக்காவில் உள்ள அடிமை நாடுகள் விடுதலை பெற வழிகாட்டிய பெருமை கானாவுக்கும் நைஜீரியாவுக்கும் உண்டு.

ஆப்பிரிக்கா அனைத்தையும் ஒரு குடையின்கீழ் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்தைப் பரப்பி வரும் நாடு கானா.

உலக நாடுகளின் கவனத்தைக் ஈர்த்து, இந்நாளைய அரசியல் திருப்பங்களில் பெரும்பங்கு கொண்டிருக்கும் கானாவைப்பற்றிய அடிப்படைச் செய்திகளை இந்நூலில் கூறுவோம்.

### நாட்டின் பெயர்

கானு 1957-ல் சுதந்தரம் பெற்றது. அதற்கு முன் இந்நாட்டிற்கு, கோல்டு கோஸ்ட்டு என்ற பெயர் நிலவி வந்தது.

இந்த நாடு பொன் விளையும் பூமி. ஐரோப்பியர் முதல் தடவையாக இங்கு வந்தபொழுது இங்கு வாழும் மக்கள் தங்க நகைகளை நிறைய அணிந்திருந்தனர். அதைக் கண்ட ஐரோப்பியர்கள் கடலோரத்தில் அமைந்த இப்பகுதிக்கு கோல்டு கோஸ்ட்டு என்று பெயரிட்டனர்.

கானு என்ற பெயர் இந்நாட்டு மக்களின் ஒரு முக்கியமான இனத்தாரின் முன்னைப் பெருமையைச் சுட்டுகிறது.


இந் நாட்டின் நடுப்பகுதியில் அக்கான் இனத்தவர் முப்பது லட்சம் பேர் வாழ்கின்றனர். இவர்கள் அண்டை நாடான ஐவரி கோஸ்ட்டிலும் பரவியுள்ளனர். கி. பி. மூன்றும் நூற்றுண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றுண்டு வரை இவர்களுடைய பேரரசு நடைபெற்றது. அதைக் குறிப்பிட்டு, உரிமைபெற்ற கானுவுக்குப் பெயரிடப் பெற்றிருக்கிறது.

அக்கான் என்பதன் மருஉவே கானு என்னும் சொல்லாகும்.

கானு என்னும் சொல்லில் உள்ள கா என்ற எழுத்தை க்+ஹா என்று உச்சரிக்க வேண்டும்.

### அமைப்பு

விரிந்து பரந்து இருக்கும் ஆப்பிரிக்காவில் மேற்கு ஆப்பிரிக்கா என்பது ஒரு சிறு பகுதி. இது காம்பியா, கானு, லைபீரியா, நைஜீரியா, சியர்ராலியோன் என்ற



கானா
அப்பர் வோல்டா
போல்கடங்கா
வ
மேல் பகுதி
வட பகுதி
டமாலே
வோல்டா ஆறு
டோகோ
பிராங் அஹாபோப் பகுதி
வோல்டா ஆறு
வோல்டா பகுதி
அஷாந்தி பகுதி
சன்யானி
குமாசி
கிழக்குப் பகுதி
ஹோ
கோபோரிடுவா
மேற்குப் பகுதி
நடுப் பகுதி
அக்ரா
டகொரடி
கேப் கோஸ்ட்டு
செகொண்டி
ஐவரி கோஸ்ட்டு
கினியாக் கடல்

முன்னாள் பிரிட்டிஷ் குடியேற்றப் பகுதிகளையும், காமரூன், டகோமி, கினியா முதலிய—பிரெஞ்சு ஆட்சியிலிருந்த—பத்துச் சிறிய நாடுகளையும் கொண்டது. இவற்றுள் கானா ஒன்று. எனினும் பல துறைகளில் ஏனைய மேற்கு ஆப்பிரிக்க நாடுகளைவிட மேம்பட்டது. கினியா கடலோரமாக அமைந்துள்ளது. இதனால் ஐரோப்பியர் தொடர்பை நெடுங்காலமாக உடையது. இந்தியாவின் நிலப்படத்தில் கோவா இருப்பதுபோல, ஆப்பிரிக்காவின் படத்தில் கானா அமைந்திருக்கிறது.

அப்பர் வோல்ட்டா, டோகோ, ஐவரி கோஸ்ட்டு ஆகிய நாடுகள் கானாவின் எல்லையில் உள்ளன.

பரப்பு

கானாவின் பரப்பு 91,843 சதுரமைல். இது தமிழ் நாட்டின் பரப்பைப்போல இரண்டு பங்குக்குச் சற்று குறைவு. நமக்கு, பெரிதாகத் தெரியும் இந்தப் பரப்பளவு ஆப்பிரிக்காவின் அளவை நோக்குமிடத்து ஒரு கடுகு அளவினதே.

''உருவு கண்டு எள்ளாமை வேண்டும்'' என்னும் திருக்குறளுக்கு இலக்கியமாக விளங்குகிறது கானா.

கறுப்பர்கள் மட்டுமே வாழும் ஆப்பிரிக்க நாடுகளில் பெரு முன்னேற்றம் அடைந்திருக்கும் நாடு இதுவே. என்குருமாவின் திறமையாலும் சூழ்ச்சியாலும் இந்நாடு அளவுகடந்த செல்வாக்குப் பெற்றிருக்கிறது; விரலைவிட வீக்கம் பெரிதாக உளது.

மக்கள் தொகை

கானாவின் மக்கள்தொகை 70 லட்சம்; இது தமிழ் நாட்டில் தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம் மாவட்டங்களின் மக்கள் தொகைக்குச் சமம் .

கானாவில் மக்கள் தொகை குறைவாக இருப்பதற்கு ஒரு காரணம் 300 ஆண்டுகட்கு முன் 20 லட்சம் பேர் இங்கிருந்து அடிமைகளாகப் போர்த்துக்கல், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகும். அடிமை வியாபாரத்தில் போர்த்துக்கல் முதலிய பல ஐரோப்பிய நாடுகள் 1482 முதல் ஈடுபட்டிருந்தன.

## பெயர்கள்

அமனூவா என்னும் பெயர் கானாவில்—நம் நாட்டில் இராமன், கிருஷ்ணன் போன்று—பெரு வழக்காக இருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை, பகற்பொழுதில் பிறந்த பெண் குழந்தைக்கு 'இலாய்' என்று பெயரிடுவர்; அன்று பிறந்த பையனுக்கு குவெசி என்று பெயரிடப்படும்.

போர்க்காலத்தில் பிறந்த குழந்தை, பஞ்சம் நிலவிய போது பிறந்தவன், பண்ணையில் பிறந்தவன் என்றெல்லாம் பொருள்படப் பெயர் வைப்பதும் வழக்கம்.

திருமணமாகிப் பல்லாண்டுகளுக்குப் பின் ஒரு குழந்தை பிறந்தால், அக் குழந்தைக்கு, 'எதிர்பாராதது' என்று பெயரிடுவர்!

கானா அரசியல் தலைவர்களின் பெயர்கள் என்குருமா, அப்பியா, போட்சியோ, அப்ரேபா புசியா, டங்குவாஹோ, டோம்போ, குரோபோ எடுசை, க்ப்டெமாஹ், கொம்லா, அக்பெலி என்பன. இவர்கள் ஒருமுறை ஷோம்பே, லுமம்பா ஆகியோருடன் அமெரிக்க அரசியலைப்பற்றி உரையாடியபோது, 'கென்னடி... இதுவும் ஒரு பெயரா?' என்று கூறினராம். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு அல்லவா!

### கடலும் மலையும்

கானாவின் கடற்கரை 334 மைல் நீளமானது. தமிழ் நாட்டில் 600 மைலுக்குக் கடற்கரை உண்டு. கானாவின் கடற்கரை சேறு நிறைந்தது; சதுப்பானது; போக்கு வரத்துக்கு வசதி போதாது.

இரு துறைமுகங்கள் மட்டும் உள்ளன; அவையும் சிறு துறைமுகங்களே.

வோல்ட்டா ஆறு, இந்நாட்டில் குறிப்பிடத்தக்கது. இது கடலுடன் கலக்குமிடத்திற்கு அருகே உப்பங் கழிகள் ஏற்பட்டுள்ளன. அதனால் கேரளத்தில் காணப் படுவது போன்ற காட்சிகள் நிலவி கண்ணுக்கும் கருத் துக்கும் விருந்து நல்குகின்றன.

வோல்ட்டா, ஆப்ராம் ஆறுகளுக்கு இடையே காடுகளும் அவற்றுக்கு வடக்கே மலைகளும் உள்ளன. மலைகள் யாவும் திருக்கழுக்குன்றத்து மலையின் அளவு உயரமானவை. அபடிப் என்றஇடத்தில் மட்டும் மலையின் உயரம் 2,000 அடி (பறம்பு மலை: 1800 அடி).

### தட்ப வெப்பம்

வெப்பமும் மழையும் ஈரமில்லாத காற்றும் நிறைந்த நாடு கானா. வெய்யில் அடித்தால் போதும் போதும் என்று எண்ணத் தோன்றும். மழை பெய்தால், கொட்டிக் கொண்டே இருக்கும். காற்று அடித்தால், எப்போது ஓயும் என்ற கவலை பிறக்கும்.

### மூலப்பொருள்கள்

கானா இப்போது கொக்கோ என்ற பொருளை மட்டுமே நம்பிக் கொண்டிருக்கிறது. பாக்சைட்டு என்னும் தாதுப்பொருள் அளவு கடந்து இருக்கிறது

இதைத் தோண்டி பக்குவப்படுத்தும் முயற்சி தொடங்கி யிருக்கிறது. இதனுல் இந்த நாட்டிற்குப் பெரியதொரு எதிர்காலம் இருப்பதாகப் பொருளாதார வல்லுனர் கருதுகின்றனர்.

வயிரக் கற்கள் உற்பத்தி, ஏற்றுமதித் துறையையும் கானு வளர்த்து வருகிறது. ஏற்றுமதிக் கணக்குப்படி, கானு, ஆப்பிரிக்காவில் நான்காவது இடத்தைப் பெற்றிருக்கிறது.

அஷாந்திப் பகுதி

கானுவில் புகழ்பெற்ற அரசாக இருநூற்றைம்பது ஆண்டுகள் செல்வாக்கும் பெற்றிருந்தவர் அஷாந்திய பகுதி இனத்தவர். இவர்கள் தொகை பத்து லட்சம். இவர்கள் வாழும் பகுதி 25,000 சதுரமைல் பரப் புடையது! இப்பகுதியின் தலைநகர் குமாசி.

இவர்கள் நெடுங்காலம் ஆங்கில ஆட்சியை ஏற்கா மல் போரிட்டுத் தங்கள் தனித் தன்மையை நிலைநாட்ட முயன்றவர்கள். இவர்களுடைய ஆட்சியில் அரசர் வீற்றிருக்க பொன்னுல் அழகியதொரு அரியணை அமைத் திருந்தனர். அந்த நாற்காலியைத் தம்மிடம் தரவேண்டு மென்று 1900-ம் ஆண்டில் ஆங்கிலேய கவர்னர் ஒருவர் கேட்டார். அதன் விளைவாக அஷாந்தி மக்கள் வீறிட்டு எழுந்தனர். ஒன்பது ஆண்டுகள் போர்புரிந்து தோல்வி யடைந்தனர்! தோற்றபோதிலும் தங்க நாற்காலியைத் தந்திரமாக ஒளித்து வைத்திருந்தனர்.

1924-ம் ஆண்டில் இது கண்டுபிடிக்கப்பட்டபோது, இந் நாற்காலியிலுள்ள தங்கத் தகடுகள் எல்லாம் அகற்றப்பட்டிருந்தன. இக்குற்றத்திற்காக நான்கு பேர் கொலை செய்யப்பட்டனர்.

இத்தகைய பின்னணியை உடைய அஷாந்தி இனத்தவருக்கு தனி மாநிலம் வழங்கவேண்டுமென்றும் மாநில அரசுகளும் மத்திய அரசும் கொண்ட அரசியல் அமைப்பு கானாவில் நிலவலாமென்றும் ஆங்கிலேயர் கருதினர்.

## ஆட்சிப் பிரிவுகளும் தலைநகரும்

கானா, சிறு நாடாக இருப்பதால் அதன் பகுதிகளுக்குத் தனித்தனியே மாநிலச் சட்டமன்றங்கள் நிறுவ வேண்டுமென்ற பிரிட்டிஷாரின் யோசனையை கானாத் தலைவர்கள் ஏற்கவில்லை. நாடு முழுவதற்கும் ஒரே ஆட்சியும் ஒரே பாராளுமன்றமும் உள்ளன.

அன்றாட ஆட்சியை நடத்த கிழக்குப் பகுதி, வடக்குப் பகுதி, மேல் பகுதி, அஷாந்திப் பகுதி, ப்ரங் அஹபோப் பகுதி, நடுப் பகுதி, வோல்ட்டாப் பகுதி என்ற எட்டுப் பகுதிகளாக கானா பிரிக்கப்பட்டிருக்கிறது. இவை நம்நாட்டு மாவட்டங்களை ஒத்தன.

இந்த மாவட்டங்களை ஆள அரசியல் தலைவர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

## தலைநகர்

கானாவின் தலைநகர் அக்ரா. இது திருச்சிராப்பள்ளி அளவினது.

கானாவிலுள்ள பிற நகரங்களின் பெயர்கள், போல் கடங்கா, டமாலே, சன்யானி, மோசி, ஹோ, கோ போரிடுவா, செகொண்டி, டகொரடி.

அக்ரா, கானா சுதந்தரம் அடைந்தபின் பல துறைகளிலும் வளர்ச்சியடைந்திருக்கிறது. கண்ணுமிடமெல்லாம் புத்தம் புதிய கட்டிடங்கள். தூய்மையான சாலை

கள், உலகெங்கும் உற்பத்தியாகும் பொருள்களெல்லாம் விற்பனை செய்யும் கடைகள், வசதிநிறைந்த உணவு விடுதிகள் ஆகியவற்றை இந்நகரில் காணலாம். அக்ரா வின் விமான நிலையமும் வானொலி நிலையமும் தொலைக் காட்சி நிலையமும் மிகக் கவர்ச்சியாக அமைந்து அந்த நாட்டுக்கு வருபவர்களை வியப்படையச் செய்கின்றன.

கூடுமானவரை, எல்லா இடங்களிலும் தட்பவெட்ப நிலையைக் கட்டுப்படுத்த ஏர்கண்டிஷன் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

1957—க்குப் பிறகு கானாவுக்கு வருகை புரியும் வெளிநாட்டார் தொகை வெள்ளம் போல் பெருகி வருகிறது. அரசியல் தலைவர், பொறியியல் வல்லுனர், கல்வியாளர், செய்தியாளர் என்னும் பல திறத்தார் இவ்வாறு வருகின்றனர். ஆப்பிரிக்க நாடுகளிலிருந் தெல்லாம் ஆயிரக் கணக்கானவர்கள் வருகின்றனர். மின்சாரக் கருவிகளைக் கறுப்பர்கள் இயக்குவதும், பல கோடி ரூபாய்ச் செலவில் கறுப்பர்கள் அணைகட்டுவதும், வெள்ளைத் தோலுடைய உயர் அலுவலர்கள் கறுப்பர் களின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பதும் ஆப்பிரிக் காவில் கானாவில்தான் முதல் தடவையாக நிகழ்ந்தன. இக்காட்சிகளை ஏனைய ஆப்பிரிக்கர்கள் கண்டபோது ஒரு கனவு நனவாயிற்று.

அக்ரா நகரின் விரைந்த முன்னேற்றம் அவர்கள் உள்ளங்களைக் கவர்ந்தது. அந்நகரின் பழம் பகுதியான சேரியையோ, அந்நாட்டின் பிற பகுதிகளையோ வெளி நாட்டினர் காணவில்லை.

அக்ரா நகரில் அவர்களைத் திணற வைத்தது சாலை களின் பெயர்கள். அவையாவன: என் குருமா ஸ்ட்ரீட், என் குருமா ரோடு, என் குருமா அவென்யு, என் குருமா பார்க், என் குருமா பொலிவார்டு.

**என்குருமா**

கானுவின் விடுதலைக்கு வித்திட்டவர்கள், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கல்வி பயின்று மக்களாட்சி முறையில் பற்றும் நாட்டு முன்னேற்றத்தில் ஆர்வமும் கொண்ட இளைஞர்கள். அவர்கள் வளர்த்த இயக்கம் படிப்படியாகப் பயனளித்து வந்தது.

கானுவின் விடுதலை இயக்கத்தின் இறுதிக் கட்டத்தில் தலைமை தாங்கியவர் என்குருமா. இவர் பெயரை நக்குருமா என்றும் கூறுவர். இவர் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் 14 ஆண்டுகள் கல்விபயின்று 1947-இல் தாயகம் திரும்பி, அரசியல் கிளர்ச்சிகளில் முழு மூச்சுடன் இறங்கினார். 1952-இல், பிரிட்டிஷ் ஆட்சியில், குறிப்பிட்ட சில அதிகாரங்களுள்ள அமைச்சரவையில் முதலமைச்சராக இருந்தார். பல முறை சிறை சென்றார். 1957-இல் உரிமை பெற்ற கானுவின் தலைமை அமைச்சரானார். 1960-இல் குடியரசுத் தலைவரானார்.

சாகும் வரை தாமே தலைவர் என்று 1962 இல் அறிவித்தார்.

என்குருமா ஆப்பிரிக்காவின் சிங்கம். அரசியல் சூதாட்டத்தில் துருப்புச் சீட்டை வைத்திருப்பவர். நாடெங்கும் தம் சிலைகளை நிறுவியவர். தம் படம் பொறித்த நாணயங்களையும் அஞ்சல் தலைகளையும் வெளியிட்டவர்.

குடியரசுத் தலைவராக இருப்பதோடு, தாமே தலைமை அமைச்சராகவும் மற்றும் இரு துறைகளுக்கும் அமைச்சராகவும் இருப்பவர். சர்வாதிகாரி. தாம் வேறு கானு வேறு என்று கருதாதவர். இவரது வாழ்க்கை வரலாற்று நூலுக்கு, 'கானு' என்றே பெயரிட்டிருக்கிறார்.

இவரை வழிகாட்டியாகக் கொண்ட ஏனைய சில ஆப்பிரிக்கத் தலைவர்களும், தங்கள் வாழ்க்கை வரலாறு நூல்களுக்கு, அவரவர் நாட்டின் பெயரை இட்டுள்ளனர்,

இவர் வல்லவர் என்பது ஒருதலை; நல்லவர் என்பது பற்றி வேறுபட்ட கருத்துக்கள் உண்டு, இயலுமாயின் ஆப்பிரிக்காவை—குறைந்தது மேற்கு ஆப்பிரிக்காவை—ஆளவேண்டுமென்பது இவரது கனு. முரணுன கருத்துக்களும் முரட்டுத்தனமான பிடிவாதமும் கொண்டவர். இவர் கொள்கை ஒருவருக்கும் புரியாத புதிர்.

கானு இவரால் பெரு முன்னேற்றம் அடைந்திருப்பது, உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உலகம் அனைத்தும் அறிந்தது. அந்த நாடு, இன்னும் பெரியதாக் இருந்திருந்தால், உலக வரலாற்றின் போக்கே மாறியிருக்கும்! ஏன் எனில், என்குருமா திறமையையும் வலுவையும் காட்ட, அது போதியதாக இல்லை.

ஆப்பிரிக்கா முழுவதும் ஒரே ஆட்சியில் இருக்க வேண்டும். ஆப்பிரிக்க நாடுகள் எல்லாவற்றுக்கும் பொதுவான ஒரு படை' தேவை. பொதுவான வெளி நாட்டுக் கொள்கையும் ஒரே நாணயமும் ஆப்பிரிக்கா வெங்கும் கடைப்பிடிக்கப்பட்டால், ஒருமைப்பாடு நிலவ அவை உதவும் என்பன என்குருமாவின் கருத்துக்கள். பொருளாதாரத் துறையில் வளர்ச்சிபெற ஆப்பிரிக்க ஐக்கியம் இன்றியமையாதது; ஐக்கியம் இன்றேல், 'காலினி' ஆதிக்கத்தின் சுரண்டலிலிருந்து ஆப்பிரிக்கா விடுபடாது. ஆப்பிரிக்கப் பொது ஆட்சியின் தலைநகர், காங்கோவில் லியோப்பில்டு வில்லியில் இருக்க வேண்டுமென்பதைக்கூட அவர் முடிவு செய்துவிட்டார்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு,
நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு"

என்பதே ஆப்பிரிக்கக் கறுப்பர் அனைவருக்கும் என்குருமா சலியாது ஆற்றிவரும் அறிவுரை.

மக்கள் இனங்கள்

ஆப்பிரிக்க நாடு ஒவ்வொன்றிலும் எத்தனையோ தொல்மரபினங்கள் உண்டு. கானாவில் வாழும் மக்கள் அக்கான், காஅடங்குமே, மோஸி, டகோம்பா, மன்புருஸி என்ற பெயருள்ள இனங்களைச் சேர்ந்தவர்கள்.

இவர்களில் சிலர் கற்கால முதல் மேற்கு ஆப்பிரிக்காவில் இருந்து வருகின்றனர். மிகப் பழங்காலக் கருவிகள், நீக்ரோக்கள் இப்பகுதியில் குடியேறியபோதே காணப்பட்டன.

இவர்களில் முக்கியமான கூட்டத்தினராகிய அக்கான் இனத்தினர், பல உள்நாட்டுச் சண்டைகளின் விளைவாக மூன்று பகுதியினராக இன்றைய கானாவில் குடியேறினர்.

முதல் குடியேற்றம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்டது. குவானியர் அப்போது வந்தனர்.

இரண்டாவது குடியேற்றம் கி. பி. 1300 அளவில் நிகழ்ந்தது. பானிதி என்ற பிரிவினர் அப்போது கடல் ஓரப்பகுதிகளில் குடியேறினர்.

இறுதியாக வந்தவர்கள் ஆஷாந்திப் பிரிவினரின் முந்திய தலைமுறையினர். இவர்கள் பதினாறும் நூற்

ருண்டின் இறுதியில்தான் இன்றைய கானாவைத் தங்கள் தாயகமாக்கிக் கொண்டனர்.

மேற்கண்ட மூன்று பிரிவினரும் அடங்கிய அக்கான் இனத்தவர் பத்தாம் நூற்ருண்டிலேயே செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்தனர். பழமைப் பண்பாட்டில் ஊறிய இந்த மக்கள் ஆதி முதல்வனையும் நில மகளையும் ஆறுகளையும் மரஞ் செடி கொடிகளையும் பேய் பிசாசு களையும் வழிபடுவர்.

மூத்தமகன் அல்லது மகள் வீட்டில் வளர்ந்த கோழியை இவர்கள் தின்பதில்லை. நெற் களஞ்சியத் தைக் காணுமல் வாழ்நாளைக் கழித்துவிடவேண்டும் என்பதும் இவர்களுடைய ஆசை.

அக்கான் இனத்தவரின் பழமையின் சிறப்பைக் குறிக்கும் சின்னங்கள் குமாஸிக்கு வடக்கே நூறு மைல் தொலைவில் காணப்படுகின்றன.

பாண்தி, அஷாந்தி என்ற இருபிரிவினரும் ஒரே தொல்மரபினத்தைச் சேர்ந்தவர்கள். ஆயினும் அவர் களுக்குள்ளே சிறுசிறு வேறுபாடுகள் உண்டு. பாண்தி பிரிவினர் இப்பகுதியில் குடியேறிய ஆங்கிலேயருடன் நெருங்கிய உறவுகொண்டனர். அதன் விளைவாக அவர் களிடையேதான் தேசிய உணர்ச்சியும் முதவில் தோன்றிற்று.

ஆங்கிலேயருக்கும் அஷாந்தி பிரிவினருக்குமிடையே பல போர்கள் ஏற்பட்டன.

## ஐரோப்பியர் வருகை

இப்பகுதிகளுக்கு வந்த முதல் ஐரோப்பியர், வணிகரே ஆவர். பதினைந்தாம் நூற்ருண்டில் போர்த்துக் கீசியரும், பதினூறும் நூற்ருண்டில் டச்சுக்காரரும்

ஆங்கிலேயரும், அதன் பிறகு டென்மார்க், பிரான்சு ஆகிய நாட்டினரும் இங்கு வந்தனர்.

இவ்வணிகர் சீமையிலிருந்து துணிமணிகளையும் மதுவகைகளையும் கொண்டுவந்து, தந்தம், வயிரம் மரச்செயபடு பொருள்கள், புவியியல் பொருள்கள் ஆகியவற்றை அவற்றுக்குப் பதிலாக வாங்கிச் சென்றனர்.

கி. பி. 1750—இல் இரண்டு இலட்சம் ரூபாய் மூல தனத்துடன் ஆங்கிலேய அரசாங்க உதவியுடன் ஆங் கிலேய வணிகரின் கூட்டு நிறுவனம் ஒன்று ஏற்பட்டது அவர்கள் பல கோட்டைகளைக் கட்டிக் கொண்டு கடலோரப் பகுதியில் ஊன்றிக் கொண்டனர். டச்சுக் காரர்களும் இத்தகைய கோட்டைகள் கட்டினர். அவற்றுள் ஒன்றே, இன்று என்குருமாவின் மாளிகை யாக—பல மாளிகைகளுள் ஒன்றாக—பயன்பட்டுவருகிறது.

கி. பி. 1821—இல் ஆங்கிலேய அரசாங்கமே வணிக நிறுவனங்களை மேற்பார்க்கும் பொறுப்பை ஏற்றது.

கி. பி. 1844—இல் நேரடி ஆட்சி தொடங்கிற்று. தொல்மரபினங்களின் தலைவர்கள் ஆங்கிலேய அரசியின் ஆளுகையை ஒப்புக்கொண்டனர். உயிர்ப்பலி போன்ற தங்கள் பழைய பழக்கங்களைக் கைவிடவும் இசைந்தனர். குற்றங்களை விசாரித்துத் தண்டிக்கும் உரிமை ஆங்கி லேயர் நியமிக்கும் நீதிபதிகளுக்குக் கொடுக்கப்பட்டது.

இந்த உடன்பாடுகளால் கொலையும், கொள்ளையும் குறைந்து பொதுமக்களும் வணிகர்களும் அச்சம் இன்றி தத்தம் வேலைகளில் ஈடுபட்டனர். அதன் பின்னர் அமைதி நிலைநாட்டப்பட்டு செம்மையான ஆட்சிக்கு அடிப்படையான அமைப்புகள் தோற்றுவிக்கப் பெற்றன.

சட்டசபை உருவாயிற்று. சுற்றியுள்ள பிரெஞ்சு, ஜெர்மன் பகுதிகளுடன் எல்லைகள் வரையறுக்கப்பட்டன.

கி. பி. 1901—இல் இப்பகுதியின் ஆட்சி பொறுப்பு முழுமையையும் பிரிட்டன் ஏற்றுக்கொண்டது.

கி. பி. 1922—முதல் தோகோலந்து, கோல்டு கோஸ்ட் அரசாங்கத்தின் ஆட்சிக்கு உட்பட்டது. தோகோலாந்து ஜெர்மெனியின் ஆட்சியில் இருந்தது. முதல் உலகப்போரில் ஜெர்மெனி தோல்வியடைந்த பிறகு அதன் ஒரு பகுதியை சர்வதேச சங்கம் ஆங்கிலேய ரிடம் ஒப்புவித்தது. அப்பகுதியே, ஆங்கிலேயர்களால் கோல்டுகோஸ்ட் அரசாங்கத்தின் வாயிலாக ஆளப்பட்டு வந்தது.

கானுவுக்கு விடுதலை கொடுக்க ஆங்கிலேயர் முடிவு செய்தபோது, பிரிட்டிஷ் தோகோலாந்தின் நிலைபற்றி ஐக்கிய நாடுகள் நிறுவனம் சிந்தித்தது. அந்நிறுவனத் தின் குழு 1956-ல் அங்கு சென்று வாக்கெடுப்பு நடத் தியது. அம்மக்கள் விரும்பியவாறே உரிமை பெற்ற கானுவின் ஒரு பகுதியாக பிரிட்டிஷ் தோகோலாந்தும் இணைந்தது.

1925 முதலே கானுவில் அரசியல் உணர்ச்சி வேக மாகப் பரவியது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் அது விரைந்து பரவிற்று. 1951-இல் என்குருமா புதிய தொரு கட்சியைத் தொடங்கினர். பெரியதொரு போராட்டத்திற்குப் பிறகு 1957-ல் உரிமை பெற்றது. 1960-இல் குடியரசு நாடாயிற்று. எனினும் இந்தியாவைப் போல் இதுவும் பிரிட்டிஷ் காமன்வெல்த்தின் உறுப்பாக இருந்து வருகிறது.

கானு சுதந்தரமடைந்தபோது மகிழ்ச்சிக் கூத்தாடி யவர் இருகூட்டத்தினர். ஒரு கூட்டத்தினர் அமைச்சர்

களும் அரசியல்வாதிகளும்; மற்றொரு கூட்டத்தினர் சுங்க அலுவலர்கள்.

உரிமை பெற்ற பிறகும்கூட, ஆங்கில அலுவலர்கள் பலர் கானாவில் தொடர்ந்து பணியாற்றினர். வெள்ளைக் காரர்களான அவர்கள் கறுப்பர்களாகிய அமைச்சர்களை யும் தலைவர்களையும் மரியாதைக்காக, 'சார், சார்' என்று அழைத்தபோது, எத்துணை தடவைகள் 'சார்' என்று அழைக்கிறார்கள் என்பதை எண்ணி உள்ளம் மகிழ்ந்தார் களாம்.

சுங்க அலுவலர்கள் வேண்டுமென்றே மற்றவர்களை எல்லாம் சோதித்த பின்னர், நெடுநேரம் கழித்து ஆங்கி லேயர்களின் பொருள்களைச் சோதித்தனராம். விமான நிலையங்களிலும், கப்பல் துறைமுகங்களிலும், ஆங்கிலே யர்களை இவ்வாறு காக்க வைப்பது அவர்களுக்கு எல்லை யற்ற மகிழ்ச்சியை அளித்தது.

இத்தகைய நிகழ்ச்சிகளால் ஆங்கிலேயர்கள் ஒரு சிறிதும் மனம் புண்படவில்லை. பொறுமையாலும் தந்திரத்தாலும் இன்றும் அந்நாட்டு மக்களுடன் நன்கு பழகி வருகின்றனர். ஆங்கிலேயர்களுடைய ஆட்சியில் பல துறைகளிலும் கானா சிறந்திருந்தது என்ற கருத்து கானா மக்களிடம் நிலவிவருகிறது. வெள்ளையர் ஆளுகை யின் கீழ் தாங்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர் என்ற எண்ணமே பொது மக்களிடம் இல்லை.

விலைவாசிகள் ஏற்றத்தால் தொழிலாளர்களிடையே சில சமயம் குமுறல் ஏற்படுகிறது. ஏராளமான தொழி லாளர்கள் அரசாங்கத்திடமே வேலை பார்ப்பதால் இந்த எதிர்ப்பு அரசாங்கத்தையே பாதிக்கிறது.

## அரசியல் சட்டம்

கானு அரசியல் சட்டப்படி ஒவ்வொரு பகுதியிலும் தொல் மரபு இனத்தின் தலைவர்கள் அடங்கிய அவை இயங்கி வருகிறது. தலைமுறை தலைமுறையாக சிறு கூட்



தொல் மரபினத் தலைவர்

டங்களின் தலைவர்களாக நாட்டாண்மைக்காரர்களாக இருந்து அம்பலம் செய்யும் ஆட்கள் ஓரளவு சட்டத்தின் மூலமும் அதிகாரம் பெற்றனர். தொன்றுதொட்டு

நிலவிவரும் பழக்கங்கள் இன்னவை என்று அறுதியிட்டுச் சொல்லும் அதிகாரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றம் விட்டுக் கொடுக்கும் எந்தத் துறையைப் பற்றியும் வகுக்கவும் வரையறுக்கவும் இவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

தொல்மரபு இனங்களின் தலைவர் யார் என்பதை முடிவு செய்யவும், அவர்களில் எவரையும் நீக்கவும் அரசினர்க்கு உரிமை உண்டு.

பொருளாதார நிலை

விடுதலை பெற்ற கானு, உலக அரசியலில் பெரும் பங்கு பெற்று வருகிறது. இதற்கு உறுதுணையாய் இருப்பது கொக்கோ ஏற்றுமதியால் கிடைக்கும் வருவாய்.

கொக்கோவின் விலையில் ஏற்றத் தாழ்வுகள் நிலவிய வண்ணமாக இருக்கின்றன. ஒரு பொருளை மட்டும் நம்பிக்கொண்டு இருப்பது சரியன்று என்ற கருத்தால், தென்னை, அன்னாசி, காபி, புகையிலை, மணிலா கடலை போன்றவை பயிரிடப் பெற்றிருக்கின்றன. ஆனால் இம் முயற்சிகள் எதிர்பார்த்த அளவு வெற்றி தரவில்லை.

வடபகுதியில் ரப்பரும், கரும்பும், வாழையும் பயிரிடத் திட்டமிடப்பெற்றிருக்கிறது. அரசாங்கத் துறையிலும் தொழில்கள் தொடங்கப் பெற்றிருக்கின்றன.

கொக்கோ பயிரிடுமுன், இங்கு எண்ணெய் பனை மரங்கள்தான் முக்கியமான பயிராக இருந்தன. இவற்றால் நல்ல வருவாய் கிடைக்கிறது! தென்னைபோல இதுவும் பயன்தருகிறது; மக்காச்சோளமும் முக்கியமான பயிர், இது குறுகிய காலத்தில் அறுவடையாகிறது; இதிலிருந்து மைதா தயாரிக்கப்படுகிறது.

இக்காலத் தேவைகளுக்கு ஏற்ற சிறந்த மரவகைகள் கானுவில் கிடைக்கின்றன. அமெரிக்கரும், ஐரோப்பியரும், லெபனுன் நாட்டினரும் மரமறுக்கும் ஆலைகளை நிறுவியுள்ளனர். இரசாயனத் தொழிற்சாலைகள், தீப்பெட்டித் தொழிற்சாலைகள், மோட்டார்க்காரின் பகுதிகளை இறக்குமதி செய்து அவற்றைக் கானுவில் இணைக்கும் தொழிற்சாலைகள் ஆகியவை ஏற்பட்டுள்ளன. இவையே பெரிய தொழில் புரட்சியாக அந்நாட்டில் கருதப்படுகின்றன.

வோல்டா ஆற்றின் குறுக்கே ஒரு அணைகட்டி மின்சாரம் உற்பத்தி செய்து அலுமினியத் தொழிற்சாலைக்கு அடிகோலப் பெற்றிருக்கிறது. இத்திட்டம் 180 கோடி ரூபாய்ச் செலவில் அமெரிக்கா இங்கிலாந்து ஆகிய நாடுகளின் உதவியில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. முதல் கட்டம் முடிவடைந்துவிட்டது.

பணத்தைச் சேமிக்கும் பழக்கம் ஆப்ரிக்கர்களிடை இல்லை. கொக்கோ விற்பனைக் குழுவில் உள்ள பணத்தைத் தவிர வேறு கையிருப்பு கானுவில் கிடையாது.

சிமெண்ட் தொழிற்சாலைகள் நிறுவவும் அரசாங்கம் ஆவன செய்து வருகிறது. கூட்டுறவு முறையில் வங்கிகளும் கடைகளும் 1946-முதல் தொடங்கப்பட்டுள்ளன. ஊழல்கள் காரணமாக அவற்றுள் சில மூடப்பட்டுள்ளன.

வெளிநாட்டார், கானுவில் முதலீடு செய்வதை சுதந்தர கானு அரசு விரும்பவில்லை. ஆனுல் முதல் ஐந்து ஆண்டுகளுக்குப் பின் அக்கொள்கை கைவிடப்பட்டிருக்கிறது.

## கொக்கோ

காணுப் பொருளாதாரத்தின் உயிர்நாடி கொக்கோ.

ஒரு காலத்தில் காணுவை வாழவைத்தது அந்த நாட்டின் தங்கச் சுரங்கங்கள். சென்ற தலைமுறையில் ஆங்கிலேயர்கள் காணுவில் பயிரிட்ட கொக்கோச் செடி, இன்று தங்கத்தையும் விஞ்சும் அளவு வருவாயைத் தருகிறது.

கொக்கோ என்பது காபி தேயிலைபோன்று உணர்ச்சியூட்டும் குடிவகை மட்டுமன்று. கொக்கோவைப் பயன் படுத்தி, சுவையூட்டும் 'சாக்லட்'டைச் செய்யலாம். கொக்கோ என்னும் மூலப்பொருள் இல்லாவிட்டால் 'சாக்லட்' செய்ய இயலாது.

உலகின் கொக்கோ உற்பத்தியில் ஐந்தில் இரண்டு பங்கு காணுவில் விளைகிறது, காணுவுக்கு அடுத்தபடியாக நைஜீரியாவிலும் இது பயிரிடப்படுகிறது. காணுவில் கொக்கோ தோட்டங்கள் சராசரி ஐந்து ஏக்கர் பரப்புள்ளனவாயிருக்கின்றன.

கொக்கோ தோட்டங்களைக் காண்பதே கண்ணுக்குக் குளிர்ச்சியான காட்சி. வெப்பம் நிறைந்த காடுகளில் இருநூறு அடி உயரத்திற்கு மரங்கள் வளர்ந்திருக்கும் பகுதிகளில் கொக்கோ செடியைப் பயிரிடலாம்.

கொக்கோ செடி முற்றிலும் வளர்ந்து பெருமரமாகி முப்பது அடி உயரம்வரை இருக்கும். செடிகள் நெருக்கமாக நடப்படுவதால் ஒன்றுடன் ஒன்று இணைந்து இயற்கையான கூரையாக அமையும். வெப்பமும் சூரிய ஒளியும் சேர்ந்து கொக்கோ காய்க்குப் பொன்னிறமூட்டி அதைப் பழுத்த பழமாக்கும்.

நம் நாட்டில் தென்னை, வாழை உருளைக் கிழங்கு முதலியவற்றின் உற்பத்தி பூச்சிகளால் தடைப்படுவதைப் போல், கானாவில் கொக்கோவுக்கு ஊறுபயக்கும் பல பூச்சிகள் உள்ளன. இதன் பயனாய், கிழக்குப் பகுதியில் கொக்கோத் தோட்டங்கள் அழிக்கப்பட்டு அஷாந்திப் பகுதிகளில் மட்டும் பல்கிப் பெருகியுள்ளன.

இலைகளுக்கிடையே பூத்துக் காய்த்துப் பழுக்கும் இயல்பு கொக்கோவுக்கு உண்டு. நன்கு பழுக்கு முன் இவைகளைப் பார்க்கும்போது கத்தரிக்காய்கள் போல இருக்கும். ஆனி மாதத்திலும், கார்த்திகை மாதத்திலும்தான் இவைகளைப் பெருமளவில் பறிக்கிறார்கள்.

கொக்கோ பயன் தர, செடியைப் பயிரிட்டதிலிருந்து ஐந்தாண்டுகளாகும், ஐந்து ஏக்கர் பரப்புள்ள கொக்கோ தோட்டம் இருந்தால், ஒரு குடும்பத்தில் ஆடவர், பெண்டிர், குழந்தைகள் எல்லோருக்கும் வேலை இருக்கும்.

கொக்கோ காயிலுள்ள ஈரத்தை போக்குவதற்காக, அதைப்பல நாட்கள் சூரிய ஒளியில் உலர்த்துவார்கள். அதிலுள்ள இனிப்புச்சத்தை அதிகப்படுத்துவதற்காக இரசாயனப் பொருள்களைச் சேர்ப்பார்கள்.

நம் நாட்டில் தேயிலை, காப்பி, ஏலக்காய் முதலியவற்றை விற்பதற்கு அரசாங்க மேற்பார்வையில் வணிகக் குழுக்கள் இருப்பதுபோல், கானாவில் கொக்கோ விற்பனையை மேற்பார்வையிட ஒரு மார்க்கெட்டிங் குழு உள்ளது. தோட்டக்காரர்கள் தங்கள் தோட்டங்களிலிருந்து கிடைக்கும் கொக்கோவை அக்குழுவிடம் ஒப்படைப்பார்கள்.

குழுவினர் இவ்வாறு கிடைக்கும் கொக்கோவைச் சுவைத்துப் பார்த்து தரம் பிரிப்பார்கள். தரத்திற்குத் தக்கவாறு விலை முடிவு செய்யப்படும்.

தரத்தில் சிறந்த கொக்கோவைத்தான் 'சாக்லட்' உற்பத்தியாளர்கள் வாங்குவார்கள். தரம் குறைந்த கொக்கோ குடிப்பதற்கு விற்கப்படும்.

கொக்கோவுடன், சர்க்கரை, வனில்லா, வாதாங் கொட்டை ஆகியவற்றை குறிப்பிட்ட ஈவுகளில் சேர்த்து, குடிக்கும் சாக்லட்டு ஆகவும், தின்னும் சாஃக்லட் ஆகவும் ஆக்கும் கலையை லண்டனிலும் ஆம்ஸ்டர்டா மிலும் வளர்த்தார்கள். இதில் இன்னும் பல திருத்தங் களைச் செய்து இன்றையச் சாக்லட்டுகளைச் செய்தனர். கொக்கோ எஸன்ஸ் என்ற பொருளை காட்பரி வணிக நிறுவனத்தினர் உருவாக்கினர்.

கொக்கோ தோட்டங்களில் வேலைபார்க்க, அண்டை நாடுகளிலிருந்தும் தொழிலாளர் வருகின்றனர். இராம நாதபுர மாவட்டத்தில் பின் மழையின்றி, நெற்பயிர்கள் சாவியாகிவிட்டால், அங்குள்ள மக்கள் தஞ்சை மாவட் டத்திற்குச் செல்லுவர்; பிற ஆண்டுகளிலும், அறுவடை முடிந்தபிறகு, தஞ்சை நெல் வயல்களுக்குச் சென்று வேலைபார்ப்பது வழக்கம். இவ்வாறே ஐவரிகோஸ்ட், நைஜீரியா மக்கள் கானாவுக்கு வருகின்றனர்.

கொக்கோ மார்க்கட்டிங் குழுவினரே, கொக் கோவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் உரிமை பெற்றிருக்கின்றனர். அக்குழுதான் கானாவின் 'ரிசர்வு பாங்கு.'

கொக்கோவின் நிறம் பச்சை; இது கானாவின் கொடியிலும் இடம் பெற்றிருக்கிறது.

## சமயம்

கடலோரப் பகுதிகளில் ஐரோப்பியப் பாதிரிகள் முதலிய சமயப் பிரசாரகர்களின் முயற்சியால் கிறித் தவ சமயம் பரவியிருக்கிறது. தமிழ்நாட்டில் கிறித்தவ

சமயத்தில் சேர்ந்த பல பெருமக்களிடம் முன்னேர் பழக்க வழக்கங்கள் நிலவுவது போலவே, கானு கிறித்த வர்களும் முன்னைத் தொடர்பை முற்றிலும் விட முடி யாதவர்களாக இருக்கிறார்கள். மூதாதையோர்க்குத் திதி கொடுக்கும் வழக்கம் அவர்களிடம் உண்டு.

இஸ்லாமிய சமயம், கானுவின் தென் பகுதிகளில் பரவியிருக்கிறது. இயற்கையையும் பேய் பிசாசுகளையும் வழிபடும் 'பாகன்'களும் உள்ளனர்.

கானுவில் கிறித்தவர் தொகை ஏறத்தாழ பத்து லட்சம். மற்றவர்களைவிட கிறித்தவர்களிடையே கல்வி வளர்ச்சி மிகுதி. ஆப்பிரிக்கர்களாகிய கறுப்பர்களே இப் பொழுது மதகுருக்களாகவும், ஆர்ச்பிஷப், கார்டினல் களாகவும் நியமனம் செய்யப்பெற்று வருகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளது தொடர்பால் இவர்கள் தொழிற்பயிற்சி பெற பெரும் வாய்ப்புப் பெற்றிருக் கின்றனர்.

கிறித்தவ சமயத்தால் எவ்வளவோ நன்மைகள் அடைந்தபோதிலும், அரசியல் சலுகைகளையும், தேர்த லில் பிற சமூகத்தினரின் ஆதரவையும் பெறுவதற்காகவும் சில கிறித்தவர்கள் தாங்கள் கிறித்தவ மதத்தைக் கைவிட்டதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

கிறித்தவ மதத்தினர் புதிய ஆட்சியாளரின் நம்பிக்கையைப் பெற முனைந்து வருகின்றனர். செல் வாக்குள்ள தலைவர்களுள், கிறித்தவர்கள் தாங்கள் கிறித்தவ மதத்தில் கொண்டிருக்கும் பற்றை வெளிப் படையாகக் காட்டிக்கொள்வதில்லை.

நீக்கிரோக்களிடமும் இஸ்லாமிய மதம் பெரிதும் பரவியிருக்கிறது. அவர்களில் செல்வாக்கு மிக்கவர்கள்

மேலைநாடுகளில் கல்வி கற்றவர்களாகையால் வெளிப்படையாக கிறித்தவ எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்டிக் கொள்வதில்லை. ஆனால் ஆங்கிலேயர்களது சட்டங்களைப் படிப்படியாகக் கைவிட்டு, முஸ்லிம்களது சட்டத்தை படிப்படியாக அமலுக்குக் கொண்டுவரும் போக்கு காணப்படுகிறது.

## மொழி

கானாவின் ஆட்சி மொழி ஆங்கிலம். கல்வி மொழியும் அதுவே.

மக்களின் தாய் மொழிகளுள் 'டிவி' என்பதே முக்கியமானது. ஃபான்டி என்பது, கடலோரப் பகுதிகளில் பேசப்படும் மொழியாகும். அக்ராப் பகுதியில் வழங்கும் மொழி 'கா'; வோல்ட்டாப் பகுதியினர் ஈவே மொழியைப் பேசுகின்றனர்.

இம்மொழிகளுக்குச் சரியான எழுத்து வடிவம் கொடுக்கும் முயற்சி, உரிமை பெற்ற கானா அரசினரால் மேற்கொள்ளப்பட்டது. ஆங்கிலேயர் புகுத்திய எழுத்துக்கள் கைவிடப்பட்டன; அவ்வாறு செய்தது தவறு என்பதை இப்போது கானா அறிஞர்கள் ஒப்புக்கொள்கின்றனர். எல்லா ஆப்பிரிக்க மொழிகளுக்குமே எழுத்து வடிவம் ஐரோப்பியர்களால் கொடுக்கப்பட்டிருப்பதால், தோற்றத்தில் பல எழுத்துக்கள் ஆங்கில எழுத்துக்களைப் போல உள்ளன.

கானாவைப் பொறுத்த மட்டில் குறிப்பிடத்தக்க இலக்கியம் எதுவுமில்லை. பழமொழிகள் மட்டுமே உண்டு.

கானா மக்கள் உலகில் வழங்கும் பல்வேறு மொழிகளைப் படிப்பதற்குரிய வாய்ப்புக்கள் கானாவில் ஓரளவு ஏற்பட்டு வருகின்றன.

## பிற துறைகள்

கல்வித்துறையில், ஆப்பிரிக்காவிலுள்ள கறுப்பர்நாடுகளில் தலைசிறந்தது கானா. அக்ரா பல்கலைக் கழகம் புத்தம் புதியது; பணத்தைத் தண்ணீர் போலச் செலவிட்டுக் கட்டிடங்களும் கருவிகளும் அமைக்கப்பட்டுள்ளன. தொழிற் கல்வியிலும் கானா விரைந்து முன்னேறி வருகிறது.

ஆப்பிரிக்க நாடுகளைப் பற்றிய ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று நிறுவப்பெற்றிருக்கிறது. இதில் பல நாட்டு அறிஞர்கள் — ஆப்பிரிக்காவுக்கு வெளியே உள்ளவர்களும் — பணிபுரிகின்றனர்.

உடல் நலத்துறையிலும் கானா முன்னேறியிருக்கிறது. மலேரியா, உறக்கம் வரும் நோய், குட்டம், மஞ்சள் காயல்—இவை ஓரளவு நிலவுகின்றன. மருத்துவத்துறையில் இன்னும் செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது.

போக்குவரத்துத் துறையில் அரசாங்க விமான நிறுவனமும், நைஜீரியாவுடன் நடத்தப்படும் கப்பல் நிறுவனமும் குறிப்பிடத்தக்கன.

## பெண்கள்

ஆடவர்கள் ஓரளவு வெளிநாட்டுத் தொடர்புள்ளவர்களாக இருந்தும்கூட, பெண்கள் கல்வித்துறையில் பின் தங்கியவர்களாக உள்ளனர். குழந்தைகளைத் தக்க முறையில் உருவாக்கத் தெரியாதவர்களாக இருந்துவருகின்றனர். அடுப்பூதும் பெண்களுக்குக் கல்வி அறிவுவேண்டியதில்லை. என்ற எண்ணம் இன்னும் முற்றிலும் மாறிவிடவில்லை. பள்ளிக்கூடங்களில் படிக்கும் ஆடவரையும், மகளிரையும் கணக்கிட்டால், பெண்டிர் தொகை ஆடவர் தொகையில் மூன்றில் ஒரு பங்காகவே இருக்கிறது.

படிக்காத பெண்களைத் திருமணம் செய்துகொண்டால், சொன்னவற்றைக் கேட்பாள், வீட்டு வேலைகளைச் செய்வாள் என்ற எண்ணம் படித்த ஆண்களிடம் நிலவிவருகிறது. ஏராளமான குழந்தைகளைப் பெறுவதில் ஆப்பிரிக்கப் பெண்கள் முதன்மையானவர்கள்.

சில்லறை வியாபாரம் முழுவதும் பெண்களால்தான் செய்யப்படுகிறது. பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்குத் தூக்கிச் சுமப்பது போன்ற கடினமான வேலைகளை பெண்கள்தான் செய்கின்றனர்,

குழந்தைகளை முதுகில் தூக்கிச் செல்லுவர். அவ்வாறு குழந்தையைச் சுமக்கிருேம் என்ற உணர்ச்சி சிறிதுமின்றி, எந்த வேலையையும் செய்யும் பழக்கம் அவர்களிடம் உண்டு.

உணவு

ஆப்ரிக்கர்கள் அனைவருமே மக்காச்சோளமும், ஓரளவு அரிசியும், பழங்களும், முட்டையும், கோழியும் உணவாக உண்பர். அவர்களது உணவில் இறைச்சி குறைவு. சத்துணவு மிகுதி.

கல்வியறிவுப் பெருக்கத்தின் விளைவாக ஐரோப்பியரைப் போல உணவு உண்ணும் பழக்கம் பரவிவருகிறது.

சமையல் செய்ய, பனைமர எண்ணெயைப் பயன்படுத்துகிருர்கள்.

கானுவும் நைஜீரியாவும்

நைஜீரியா, கானுவின் எல்லையில் இல்லாவிட்டாலும் அண்மையில் இருக்கிறது. கானுவின் தலைநகரான அக்ராவுக்கும் நைஜீரியாவின் தலைநகரான லாகோசுக்கும்

இடையே உள்ள தொலேவு 328 மைல்தான்—சென்னேக்கும்விருதுநகருக்கும் உள்ள தொலேவு.

நைஜீரியா பெரிய நாடு; இருப்பினும், கானு நைஜீரியாவுடன் போட்டி போடுகிறது. இதனுல் அந்த நாட்டில் கானுமீது கசப்பு உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. நைஜீரியாவின் தலேவர்கள் தங்கள் பாரர்ளுமன்றத்தில் கானுவைப் பெயர் குறிப்பிடாமல் திட்டுகிருர்கள்.

பல்வேறு காரணங்களால் ஐக்கிய நாடுகள் அவையில், நிறைந்த செல்வாக்குப் பெற்றிருக்கும் நீக்ரோ நாடு கானுதான். நீக்ரோக்கள் மிகுந்த நாடுகளில் ஆப்பிரிக்காவில் முதன்முதலில் சுதந்தரம் பெற்ற நாடு கானுதான். இந்த நாடுகளில் நகராண்மைக் கழகங்கள் முதன் முதலில் ஏற்பட்டதும் கானுவில்தான்.

## வெளிநாட்டார்

கானுவில் ஆப்பிரிக்கர் அல்லாதவர் தொகை பத்தாயிரம்தான் இருக்கிருர்கள். கிரேக்க, லெபனிய வணிகரும் அரசாங்க அலுவல்களிலுள்ள வெள்ளேக்காரர்களும் சிறு வியாபாரங்களில் ஈடுபடும் 100 இந்தியரும் கானுவில் வாழ்கின்றனர். இதனுல், பிற ஆப்ரிக்க நாடுகளில் காணப்படும் வெறுப்பு உணர்ச்சி கானு மக்களிடையே நிலவவில்லே.

## கானுவும் நேருவும்

கானு, சுதந்தரம் பெற்ற நாளில் (1957 மார்ச்சு 6) டில்லியிலுள்ள ஆப்பிரிக்க மாணவர்கள் அவ்விழாவைக் கொண்டாடினர். அப்போது ஜவஹர்லால் நேரு கூறிய சொற்களாவன:

"இந்த விழாவில் கலந்துகொள்வது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

காஞவின் தலைநகரான அக்ராவில் இன்று நான் இருக்க இயலாமற்போனது எனக்கு மிகுந்த வருத்தம் தருகிறது. இப்போது தேர்தல்கள் நடந்து கொண்டிருப்பதால், யான் இந்தி யாவை விட்டு வெளியே செல்ல இயலாதவனுக இருக்கிறேன்.

எந்த நாட்டின் சுதந்தரமும் எனக்கு இன் பம் தரும் நிகழ்ச்சி. இவ்வளவு காலமும் பின் தங்கிவிட்ட, புறக்கணிக்கப்பட்ட ஆப்பிரிக் காவில்—வலுவும் வாய்ப்பும் உள்ள ஒரு சிறு நாடு—காஞ எழுச்சி பெற்று வருவதையறிந்து பூரிப்படைகிறேன்.

இருள் நீங்கி ஒளி உண்டாக்கும் பொற் காலத்தின் தொடக்கமாக, இன்றைய நிகழ்ச்சி கள் அமையட்டும். காஞ மக்களுக்கும் தலைவர் களுக்கும் நம் பாராட்டு உரியது. இந்தியாவின் நல்லெண்ணத்தையும் கூட்டுறவையும் எப் போதும் அவர்கள் எதிர்பார்க்கலாம்.

அரசியல் துறையில் சிறந்த முடிவுசெய்து காஞவுக்கு உரிமை வழங்கிய ஆங்கிலேயர் களுக்கும் நம் பாராட்டும் நன்றியும் உரியது.''

அடுத்த ஆண்டிலேயே—அதாவது 1958-இல் என்குருமா இந்தியாவில் விரிவாகச் சுற்றுப்பயணம் செய்தார். அப்போது நேரு கூறியதாவது:

''உரிமை பெற்ற ஒரு நாட்டின் பிரதி நிதியான தங்களை, எங்களைப் போலவே காமன் வெல்த்தில் உறுப்பினராக உள்ள ஒரு நாட் டைச் சேர்ந்த தங்களை, ஆப்பிரிக்காவெங்கு

முள்ள பின் தங்கிய மக்களை மேம்படுத்த விரும்பும் திங்களை உளங்குளிர வரவேற்கிறோம்.

நெடுங்காலம் அடிமைப்பட்டுக் கிடந்து விடுதலை பெற்றிருப்பதால் விடுதலையின் சிறப்பை நாம் நன்றாக உணர்ந்து பொறுப்புடன் கடமைகளை நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். இவ்வாறு ஈடுபடும் பணிகளில் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதும், அதற்காக விஞ்ஞான முன்னேற்றத்தைப் பயன்படுத்திக் கொள்வதும் நம் இருநாடுகளுக்கும் உள்ள பொதுவான பிரச்சினைகளாகும்.

**வளர்க இந்தியா—கானா நல்லுறவு!**

**பல்சுவை**

கானாவில் இருப்பவை 35,000 சதுரமைல் பரப்புள்ள வோல்ட்டா ஏரி என்னும் உலகிலேயே பெரிய செயற்கை ஏரி.

குடிவகைகள் வியாபாரம் செய்யும் இடமாக அமைக்கப்பெற்ற பூங்காக்கள்.

கானாவில் இல்லாதவை நிலக்கரி, பெட்ரோல், இரும்புத் தாது, எதிர்க்கட்சிகள்.

கானாவின் இறக்குமதிகள்: தொழில் வல்லுனர், இயந்திரங்கள், சாக்லெட்.

கானாவின் ஏற்றுமதிகள் : கொக்கோ, தங்கம், இஞ்சி, மங்கனீசு, வைரம், கருங்காலி முதலிய மரவகைகள்.

கானா மக்களின் உடை: தோகா என்னும் ஒருவகைத் துப்பட்டி.

இது 'கென்ட்' எனப்படும் உள்நாட்டுக் கைத்தறித் துணியில் தைக்கப்படும்.

கானவில் கட்டாயமாகப் பயிலவேண்டிய மொழிகள்: ஆங்கிலமும், பிரெஞ்சும்.

புனித நாள்: சனிக்கிழமை.

கானவின் நாணயம்: பவுன். லண்டன் பவுனும் கா பவுனும் சட்டப்படி ஒரே மதிப்புடையவை. இந்தி ரூபாயும் இலங்கை ரூபாயும் போல. ஆனல்...

கான மக்கள் விரும்புபவை: அமெரிக்க இசை, அமெ கத் திரைப்படங்கள், கடன் கொடுத்துதவும் நாடுகள் ஐக்கிய ஆப்பிரிக்காவைப்பற்றிய பேச்சு.

கானவில் அடிக்கடி நிகழ்பவை: என்குருமாவை கொலை செய்யத் திட்டமிட்டதாகக் குற்றம் சாட் தலும் நாடுகடத்தலும். அமைச்சர்கள், நீதிபதிக பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவியிலிருந்து நீக் படல்.

கானவின் கனு; 'சுண்டைக்காய் நாடான கானதா ஆப்பிரிக்காவின் குரல்' என்ற முழக்கத்தைக் கேட வேண்டும் என்பது.